செ.வெ.எண்: 596 நாள்: 17/07/2010

## செய்தி வெளியீடு

**பொது விநியோகத் திட்டச் செயல்பாடுகள் குறித்து நியாய விலைக் கடைகள், கிடங்குகள், வட்ட வழங்கல் அலுவலகத்தில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் திடீர் ஆய்வு**

பொது விநியோகத் திட்டச் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இன்று (17.07.2010) காலை 9.00 மணிக்கு மாண்புமிகு சுற்றுலா மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு. என். சுரேஷ் ராஜன், ஆய்வு குழுவினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர்களுடன் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டார்கள். முதலில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கொட்டாரம் மற்றும் நாகர்கோவில், மங்களாவடி நியாயவிலைக் கடைகள், சுசீந்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் நியாயவிலைக் கடை, பிரம்மபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் புலியூர்குறிச்சி நியாயவிலை விலைக் கடை, பரைக்கோடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் நியாயவிலைக் கடைகளில் ஆய்வுகள் மேற்கொண்டார்கள்.

கொட்டாரம் நியாயவிலைக் கடை ஆய்வின்போது நியாயவிலைக் கடையில் 1,600 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருந்தது தெரியவந்ததையடுத்து, இக்கடையை இரண்டாக பிரித்திடவும், மேலும், கடை மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதால், உடனடியாக கடையை பழுதுபார்த்திடவோ அல்லது வேறு இடத்திற்கு மாற்றிடவோ நடவடிக்கை எடுக்கும்படி மண்டல மேலாளருக்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆய்வின்போது, நியாயவிலைக் கடைகளில் பராமரித்திடும் போலி குடும்ப அட்டை பதிவேட்டினையும், 'அ' பதிவேட்டையும், கடையில் இருப்பிலிருந்த அரிசியின் தரத்தையும், கடையில் இருப்பில் வைக்கப்பட்டிருந்த பொருட்களையும், விற்பனை தொகை ரொக்கத்தினையும் ஆய்வு செய்தார்கள்.

சுசீந்திரம் நியாயவிலைக் கடை, நாகர்கோவில், மங்களாவடி நியாயவிலைக் கடை, புலியூர்குறிச்சி நியாயவிலைக் கடை மற்றும் பரைக்கோடு நியாயவிலைக் கடைகளில் வரிசையில் நின்றிருந்த பொது மக்களிடம் விசாரணை செய்ததில், அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் தங்களுக்கு தரமாகவும், எடை குறைவில்லாமலும் வழங்குவதாகவும் தெரிவித்தார்கள். அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் பொது விநியோகத் திட்டப் பொருட்களை பொது மக்கள் பார்க்கும் வண்ணம் முறையாக காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்று விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

அடுத்தப்படியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கோணம் கிடங்கில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது, கிடங்கில் சமச்சீர் எடை போடப்பட்டு (Standardised Bags) வைத்திருந்த அரிசி மூட்டைகளை மறு எடை போட்டு பார்த்ததில் எடையளவு சரியாக இருந்ததை கண்டறிந்து திருப்தி தெரிவித்தார்கள். கிடங்கில் பணிபுரியும் சுமை தூக்கும் தொழிலாளர்கள் மாண்புமிகு அமைச்சரை சந்தித்து, அவர்களுடைய கோரிக்கைகளை தெரிவித்தனர். சம்பந்தப்பட்ட அலுவலர்களை அனுப்பி அவர்களுடைய கோரிக்கைகளை உடனே பரிசீலப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள்.

தக்கலையிலுள்ள கல்குளம் வட்ட வழங்கல் அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டு, புலியூர்குறிச்சி நியாயவிலைக் கடையில் பராமரிக்கப்பட்டு வரும் அ பதிவேட்டுடன் வட்ட வழங்கல் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் அ பதிவேட்டின் பதிவுகளை ஒத்திசைவு செய்து பார்த்தார்கள். புதிய குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்து, 60 நாட்களுக்குள் அட்டை முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்தார்கள்.

அடுத்து மார்த்தாண்டத்திலுள்ள தி/வா. ராஜகோபால் மண்ணெண்ணெய் மொத்த வழங்கல் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார்கள். இந்நிலையத்திலிருந்து 12,000 கி.லி. மண்ணெண்ணெய் 16.07.2010 அன்று பல்வேறு நியாயவிலைக் கடைகளுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. இங்கிருந்து அனுப்பப்படும் மண்ணெண்ணெய் சரியான அளவில் நியாயவிலைக் கடையை சென்றடைகிறதா என்பதை அறிவதற்காக எடைகோடு நியாயவிலைக் கடைக்கு சென்று ஆய்வு செய்ததில் இக்கடைக்கு 16.07.2010 அன்று அனுப்பப்பட்ட 1,200 லிட்டர் மண்ணெண்ணெய் கணக்கில் கொண்டு வரப்பட்டிருந்ததையும், வரிசையில் நின்றிருந்த பொது மக்களிடம் விசாரித்ததில் அனைத்து பொருட்களும் தங்களுக்கு முறையாக, எடை குறைவில்லாமல் வழங்கப்படுவதாகத் தெரிவித்ததை கண்டு திருப்தியடைந்தார்கள்.

மேலும், பொது விநியோகத் திட்டப் பொருட்கள் வழங்குவது மற்றும் விற்பனையாளர்களின் சேவையில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் உடனடியாக கன்னியாகுமரி மாவட்ட வழங்கல் அலுவலருக்கு 9445000391 என்ற செல்பேசியிலும், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 279555 என்ற

தொலைபேசியிலும், மாநில நுகர்வோர் தொலைத் தொடர்பு உதவி மையம் எண். 2859 2828க்கும், புகார்களைத் தெரிவிக்கும்படி அறிவுறுத்தினார்கள்.

தல ஆய்வு முடிவு பெற்ற பின்னர், நண்பகல் 3.30 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கத்தில் உணவுப் பொருள் வழங்கல் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர்களின் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு. என். சுரேஷ்ராஜன் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

ஆய்வு கூட்டத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் உரையாற்றுகையில் நியாயவிலைக் கடை பணியாளர்கள் பணியின் போது கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து அளிக்கப்பட்டுள்ள கையேட்டின்படி 3 மாதத்திற்கு ஒரு முறை மண்டல இணைப்பதிவாளர் பயிற்சி அளித்து விற்பனையாளர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் சந்தேகங்களை தீர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

வட்ட வழங்கல் அலுவலர்களின் கடமைகள், பொறுப்புகள், அலுவலத்தில் பெறப்படும் மனுக்கள் தீர்வு, குடும்ப அட்டைகள் தகவல் தொகுப்பை மேம்படுத்தி “அ” பதிவேட்டுடன் சரிபார்த்தல், அத்தியாவசியப் பொருட்களை ஆன்லைன் முறையில் ஒதுக்கீடு செய்தல் போன்ற இனங்களின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு செய்தார்கள்.

ஒவ்வொரு மாதமும் நடைபெறும் வட்ட அளவிலான மக்கள் குறை தீர் கூட்டங்களில் பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும் உடனுக்குடன் தீர்வு செய்யவும், மாவட்ட வருவாய் அலுவலர், எரிவாயு முகவர்கள் எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர்களுடன் நடைபெறும் மாதாந்திரக் கூட்டங்களில் எரிவாயு நுகர்வோர்களிடமிருந்து பெறப்படும் புகார்களை காலதாமதமில்லாமல் தீர்வு செய்யவும் அறிவுரை வழங்கினார்கள்.

ஒதுக்கீட்டு ஆணையினை மாதந்தோறும் 3 தேதிக்குள் பிறப்பிக்க வேண்டும்; அத்தியாவசியப் பொருட்களை 25–ம் தேதி முதல் மாத இறுதி நாளுக்குள் முன் நகர்வு செய்தும், மீதமுள்ள பொருட்களை 1–ம் தேதி முதல் 20–ம் தேதிக்குள் நகர்வு செய்தும், அனைத்து பொருட்களும் பொது மக்களை போய் சேரும் நிலைமையை உருவாக்க வேண்டும்; நியாயவிலைக் கடை பணியாளர்களால் தினசரி S.M.S. மூலம் அனுப்பும் இருப்பு விவரங்களை ஆய்வு செய்து கடைகளுக்கு தேவையான பொருட்களை வட்ட வழங்கல் அலுவலர்கள் நகர்வு செய்ய வேண்டும்; 60 நாட்களுக்குள் குடும்ப அட்டை வழங்க வேண்டும்; தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்களுக்கு 30 நாட்களுக்குள் பதில் அனுப்ப வேண்டும்; குடும்ப அட்டைகளில் மாற்றம் செய்யக் கோரும் விவரங்களை விசாரணை செய்து அன்றே பதிவு மாற்றம் செய்து கொடுக்கப்பட வேண்டும்; மக்கள் சாசன விவரங்களை வட்ட வழங்கல் அலுவலக தகவல் பலகையில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்று பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

நியாயவிலைக் கடைகளுக்கு ஒரே வண்ணத்தில் பெயிண்ட் அடித்து கடையை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்; முறையற்ற வகையில் எவரையும் பணி செய்ய அனுமதிக்கக் கூடாது; அத்தியாவசியப் பொருட்களை பொது மக்கள் பார்க்கும் வண்ணம் முறையாக காட்சிப்படுத்த வேண்டும் ; சம்பந்தப்பட்ட கடைக்குரிய “அ” பதிவேடுகளில் மாதம் ஒரு முறை முழுமையாக திருத்தங்கள் மேற்கொண்டு வட்ட வழங்கல் அலுவலர்கள் கையொப்பமிட வேண்டும். தவறுபவர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள்.

அதன் பிறகு மாவட்ட வழங்கல் அலுவலர், மண்டல இணைப்பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஆகியோர்களின் செயல்பாட்டினை தனித்தனியாக ஆய்வு செய்து எவ்வித குறைபாடுகளுமின்றி செயல்பட அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், திரு. ஸ்வரன் சிங், இ.ஆ.ப., முதன்மை செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, திரு. வீர சண்முக மணி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திரு. சி.என். மகேஸ்வரன், இணை ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. எல். சித்திரசேனன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர், திரு. ராஜேந்திர ரத்னு, இ.ஆ.ப., கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

2/2

12/7/10

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

உணவுத் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர்
தலைமைச் செயலகம், சென்னை 600 009